# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 15.07.2026
**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை
**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 12825/A/2023

திரு. T.மாரிமுத்து -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
அன்னவாசல் ஒன்றியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (15.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு. T.மாரிமுத்து ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திருமதி.R.மேகலா<br>பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், அன்னவாசல் ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 24.04.2023 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த 22.02.2023 அன்று முத்துக்காடு ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகளின் பெயர் விபரம் நகல் உட்பட 4 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ----- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ----- |

| | |
|---|---|
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 31.05.2023 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ----- |
| பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 14.07.2023 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திருமதி.R.மேகலா, பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், அன்னவாசல் ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ந.க.எண்.தி1/3052/2023, 13.12.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், ந.க.எண்.தி1/3052/2023, 14.07.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் அளிக்கும்பொருட்டு ஆணையத்தில் சமர்ப்பிக்க எடுத்துவந்திருப்பதாகத் தெரிவித்து அதனை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்து பின்வருமாறு உத்தரவிடுகிறது :-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களை <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12825/A/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம்,
அன்னவாசல்,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 101.

**<u>மனுதாரர்</u>**

திரு. T.மாரிமுத்து
318, S.M. காலனி,
காவேரி நகர் அஞ்சல்,
குளத்தூர் தாலுகா,
புதுக்கோட்டை - 622 504.

Copy to file

KRM/PA 16.07.2026